# மூலிகை வளர்ப்போம் பயன் பெறுவோம்



# 11. பொன்னவரை

**தாவரவியல் பெயர்:** *Cassia auriculata Linn*
*Sena auriculata*
**குடும்பம்** : LEGUMINOSEAE
FABACEAE
**சிங்களம்** : ரணவரா
**சமஸ்கிருதம்** : ஆவர்த்தகி/அக்ஷிரங்கா

**தமிழ்** : பொன்னவரை
**ஆங்கிலம்** : Mature tea tree, Tanner"s cassia
**பரம்பல்** : வித்து

**மருந்துக்காக பயன்படும் பகுதிகள்:**
இலை,பட்டை,பூ,வேர்,வித்து ஆகிய பஞ்சாங்கம் மற்றும் மொட்டு

**அறிமுகம்**
மஞ்சள் பூக்கள் கொண்ட ஒரு புதர் செடி. பழங்காலத்திலிருந்தே பல்வேறு நோய்களுக்கு பாரம்பரிய மருத்துவத்தில் பொன்னவரை பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. உலர்ந்த பூக்கள் மற்றும் பூ மொட்டுகளிலிருந்து தயாரிக்கப்படும் தேநீர் நீரிழிவு நோயாளிகளுக்கு நல்லது மற்றும் பெண்களின் சருமத்தை அழகாக மாற்றுகிறது. உலர்ந்த இலைகள் தேநீராகவும் குடிக்கப்படுகின்றன. உலர் விதைப் பொடி நீரிழிவு நோய் மற்றும் கண் நோய்களுக்கு நல்லது. கொழுந்தை பச்சையாக அல்லது சுண்டலாக சமைத்து உண்ணலாம். பொன்னவரை இலைகளை கஞ்சியாக தயாரித்து குடிக்கலாம். விதைகளை வறுத்து கோப்பி போல பருகுவது பிரபலமான பானமாகும். இலைகளில் நைட்ரஜன் மற்றும் பொட்டாசியம் அதிகம் இருப்பதால், நெல் வயல்களுக்கு உரமாக இடுவதற்கு மிகவும் ஏற்றது. இலங்கையின் கரையோர வறண்ட பகுதியில் பரவலாக வளர்க்கப்படுகிறது. மேலும் காடுகள், சாலையோரங்கள் மற்றும் வறண்ட காடுகளின் இயற்கை சூழலில் இத்தாவரங்களை காணலாம். தோட்டத்தில் அலங்காரத்திற்கு வளர்க்கப்படும், ஒரு மருத்துவ குணமுள்ள தாவரமாகும்.

**தாவரவியல் விளக்கம் –**
மூன்று மீட்டர் உயரம் வரை புதராக வளரும் பல்லாண்டு தாவரமாகும். பட்டை மென்மையாகவும் சிவப்பு கலந்த பழுப்பு நிறமாகவும் இருக்கும். கலப்பு இலைகள் காணப்படும். காது வடிவத்தில் துணை இலைகள் உள்ளன. இணைந்த இலைகள் 16-24 காணப்படும். இலைகள் ஒவ்வொன்றும் எதிர் பக்கங்களில் ஜோடியாக அமைந்துள்ளன. மேல் மேற்பரப்பு பளபளப்பாக இருக்கும். கீழ்மேற்பரப்பு பழுப்பு நிறம். சிறிய இலை 2-2.5 செ.மீ நீளமும் 1-1.5 செ.மீ அகலமும் கொண்டவை. இரண்டு முனைகளும் மழுங்கியவை. ஆரஞ்சு அல்லது மஞ்சள் நிறப் பூக்கள் ஒரே மாதிரியான மஞ்சரிகளில் பிறக்கும். புல்லி ஐந்து பிரிவுகளை கொண்டது. வெளிப்புற ஜோடி உள் ஜோடியை விட பெரியது. குறுகிய தட்டையான காய்கள். வெளிர் பழுப்பு நிற 7-11 செமீ நீளமும், சுமார் 1-1.5 செமீ அகலமும் கொண்டது. 12-20 விதைகள். ஒவ்வொன்றும் தனித்தனி அறைகளில் அமைந்துள்ளது. பொதுவாக பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பூக்கும்.

**விவசாய விளக்கம்**
விதை மூலம் இனப் பெருக்கம் செய்வது பாரம்பரிய முறையாகும். காய்கள் பழுப்பு நிறமாக மாறிய பிறகு, அவற்றை உடைத்து அல்லது காய்களை உலர வைக்கவும். காய்களை கையால் நசுக்கி விதைகளை சேகரிக்கவும். பல காய்களில் மோசமான விதைகள் உள்ளன, எனவே சரியான விதைகளைத் தேர்ந்தெடுப்பது முக்கியம்.
பொன்னவரை விதைகளை 12-24 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து மணலில் முளைக்க விட வேண்டும். விதைகள் சுமார் 10 மாதங்கள் வரை வாழக்கூடியவை. முளைப்பதற்கு சுமார் 15 நாட்கள் ஆகும். நாற்றங்காலில் முளைத்த விதைகளை 10 அடி இடைவெளியில் 30x30x30 செ.மீ குழிகளில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 1-3 ஆண்டுகளுக்குப் பிறகு பயிர்கள் அறுவடை செய்யப்படுகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மரப்பட்டை அறுவடை செய்யப்படும். பூக்கள், இலைகள் மற்றும் முழு செடியையும் தேவைக்கேற்ப அறுவடை செய்யலாம்.

**அறுவடை மற்றும் சேமிப்பு**
பூக்களை உலர்த்தி உலர்ந்த பாத்திரத்தில் அல்லது பாலித்தீன் கொள்கலன்களில் வைப்பது நல்லது. இலைகள், பட்டை, வேர்கள் மற்றும் விதைகளை கூட உலர்த்தி ஜாடிகளில் அடைக்க வேண்டும், ஏனெனில் இவை மிக விரைவாக சிதைந்து, அவற்றின் தரத்தை இழக்கின்றன.எனவே அவற்றை விரைவாகப் பயன்படுத்துவது நல்லது.

**தற்போதைய பயன்பாடு மற்றும் சந்தை நிலைமைகள்**
சந்தையில் ஆண்டுக்கு 30,000 கிலோகிராம் விற்கப்படுகிறது மற்றும் 8000 கிலோகிராம் மருந்து தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது, இதில் 93% உலர் தாவரங்களாக பயன்படுத்தப்படுகின்றன.


ஆக்கம்:
வைத்தியர் லக்ஷாந்த குணசிங்க,
ஆயுர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி-கங்கவட்ட கோரளை.

தமிழாக்கம்:
வைத்தியர் எம்.எஸ்.எப்f. ஷப்fரா,
ஆயுர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி-நாஉல.